**கவனிக்க.-** *2023.06.30 ஆந் திகதிய 2339 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2340 - 2023 ජූලි මස 07 වැනි සිකුරාදා - 2023.07.07**

*2340 ஆம் இலக்கம் – 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | *286* |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | *287* |


**கவனிக்க.-** *நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் 2023, யூன் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2023, யூலை மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூலை மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

285 - B 082472 - 353 (2023/06)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புச் செய்யப்பட்ட பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) இற்கான அறிவித்தல்ஸ்

தென் மாகாண சபையின் காலி மாவட்டத்தில் போப்பே போத்தல பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர்/பிரதி காணி ஆணையாளர் (உள் மாகாண) எல். என். பியுமலீ லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆவது உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1984.06.14 ஆந் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்ட இலக்கம் எல். எல். 49045 மற்றும் கா/பிர 3504 அன்பளிப்புப் பத்திரத்தின் உரித்துடையவரான மொல்லிகொடவத்த, ஹபுகலயில் வசிக்கின்ற நியாகம கமகே கருணாபால என்பவருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட அவரிற்குப் பிற்பாடு அன்பளிப்புப் பத்திரதாரரின் துணைவரான மஹதந்திரிகே சோமவதீ காலி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தின் இலக்கம் எல். ரீ. ஓ. ஏ 01/75 மற்றும் எல். ரீ. ஓ. 355 இன் கீழ் 2004.02.20 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ் உள்ள, கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள காணிக்கு பிரதிநிதி என்பதனால் சட்டரீதியாக உரித்துடையவர் எவரும் இல்லாதபடியால் அல்லது உரிமை கோருகின்ற ஒருவர் இருந்தும் அவர்/அவள் பிரதிநிதியாக விருப்பம் இன்மையால் பிரதிநிதியாக எவரும் ஆஜராகாமை காரணமாக அவ் அன்பளிப்புப் பத்திரத்தின் மேல் உள்ள சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக யாதேனும் ஒரு முறைப்பாடு காணப்படின், அதனை 2023.08.18 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தரவும்.

#### அட்டவணை

காலி நிருவாக மாவட்டத்தின் போப்பே போத்தல பிரதேச செயலகப் பிரிவின் நான்கு கடவைகள் பத்துவின்/கோரலே 123 ஏ நிலதெனிய கிராம அலுவலர் பிரிவின் ஹபுகல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான, நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பீ.பீ.ஏ 2086 ஆம் இலக்கம் கொண்ட நிலத் துண்டுகளின் இலக்கம் 70 ஆம் இலக்கம் கொண்ட ஒரு பகுதியாகக் காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் ரூட். 01, பேர்ச் 08.1 விசாலம் உள்ளதுமான, அளந்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ள, கீழ் உள்ளவாறான எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி, மொல்லிகொடவத்த.

வடக்கு : இத்திட்டத்தின் நிலத் துண்டு இலக்கம் 68 மற்றும் 69;
கிழக்கு : இத்திட்டத்தின் நிலத் துண்டு இலக்கம் 68 மற்றும் 83;
தெற்கு : இத்திட்டத்தின் நிலத் துண்டு இலக்கம் 74;
மேற்கு : இத்திட்டத்தின் நிலத் துண்டு இலக்கம் 72 மற்றும் 73.

எல். என். பியுமலீ லியனகே,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி,
ஆணையாளர் (உள் மாகாணம்),
போபே - போத்தல.

2023, யூன் 02.

07 - 30

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:. 4/10/73397.
காணி ஆணையாளரின் (அம்பாறை) இல.:
-අම්/ඉකො/ඉ/සද්/වාණි/55.

### காணி பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம் அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட W/89/F சத்தாதிஸ்ஸபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சத்தாதிஸ்ஸபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் வரையப்பட்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 499 இல் பகுதியாக காட்டப்பட்ட சுமார் 0.0535 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக திரு. லுல் பத்துவ வடுகே பிராஷான் மதுரங்க எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : துண்டு இலக்கம் 496;
கிழக்கு : துண்டு இலக்கம் 499 இன் எஞ்சிய பகுதி;
தெற்கு : கடத்திரள் வரைபட 280009 இன் துண்டு இலக்கம் 01;
மேற்கு : துண்டு இலக்கம் 499 இன் எஞ்சிய பகுதி.

குறித்த காணி கோரப்பட்ட தேவைக்கு குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (30) (கௌரவ அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட 2023.04.27 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி).

(ஆ) **வருடாந்த குத்தகை** .- 2023 ஆம் வருடத்தின் காணியின் விலைமதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2023 ஆம் வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த ஆண்டில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்திப்பட்ட குத்தகைகப்பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தைகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாக செலுத்தப்பட வேண்டும்;

**தவணைப்பணம்**.- அறவிடப்படமாட்டாது;

(இ) குத்தகைக்காரரினால் இக் காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட (01) காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான)/பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள/கட்டப்பட்ட கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை நடைமுறைபடுத்தப்படும் திகதியிலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும் வரை காணி கீழ்க்குத்தகைக்கு அல்லது உரிமை மாறலுக்கு அனுமதிக்கப் படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் கோரிக்கை யின்படி இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல,
2023, யூன் 20 .

07 - 10

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:. 4/10/65067.
தென் மாகாண பிரதி காணி ஆணையாளரின் இல.:
HDLC/03/46/06/11.

## காணி பரிமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீகஹஜதுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மீகஹஜதுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள சுவட்டு வரைபட இலக்கம் 7742 ஐ கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 1 மூலம் காட்டப்பட்ட 01 ஏக்கர் விஸ்தீரண்முள்ள அரச காணியை வணிக நோக்கத்திற்காக அளுத்வெல குருகே பிமயானி பெரேரா எனும் பெயரில் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி;
கிழக்கு : வீதி;
தெற்கு : வீதி மற்றும் கே. ஆர். சமன் பிரியந்தவின் காணி;
மேற்கு : டிங்கிரி பண்டாவின் காணி.

03. குறித்த காணி கோரப்பட்ட தேவைக்கு குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .-முப்பது (30) வருடங்கள் (30) (2023.01.27 ஆம் திகதி தொடக்கம் 30 வருடங்கள் முன்னோக்கி);

(ஆ) **வருடாந்த குத்தகை** .- பிரதான விலைமதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடகளுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் இந்த குத்தகைப் பணம் முந்தைய 05 ஆண்டுகளின் முடிவில் அறவிடப்பட்ட தொகையில் 4% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது;

**தவணைப்பணம்**.- வருடாந்தர குத்தகை தொகையை விட மூன்று மடங்காகும்;

**அபராதக் கட்டணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணி யின் அபிவிருத்தியடையாத வணிக மதிப்பில் 10% தொகையாகும்;

(இ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட (01) காலத்திற்குள்ளாக மாகாண காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் திருப் தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக் காணி வணிக நோக்கத்திற்கு தவிர்ந்த வேறெந்த நோககத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) மாகாண காணி ஆணையாளர்/பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள/கட்டப்பட்ட கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.01.27 தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்க ளாகிலும் முடியும் வரை காணி கீழ்க் குத்தகைக்கு அல்லது உரிமை மாறலுக்கு அனுமதிக்கப்படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் செலுத்த வேண்டிய நிலுவையான குத்தகைப் பணத்திற்கு 10% அபராத வட்டி விதிக்கப்படும்.

இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் கோரிக்கையின்படி இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல,
2023, மே16.

07 - 11

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல:. 4/10/61826.
கேகாலை உதவிக் காணி ஆணையாளரின் இலக்கம்:. ALC/
KG/D/2/2/1/2/10.

## அரச காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

01. கேகாலை மாவட்டம், கலிகமுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான பிசோவெல கிராம உத்தியோகத்தர் பிரிவின் கலிகமுவ கர்மாந்தபுர பிரதேசத்தில் அமையப்பெற்றிருக்கும் கிராமத்தின் அளவையியல் ஆணையாளர் நாயகத்தினால்

தயாரிக்கப்பட்ட, கேகாலை அளவையியல் அதிகாரியின் பொறுப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ள இலக்கம் 610031 இனையுடைய கடற்திரல் வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 153 இன் மூலம் காட்டப்படுகின்ற 0.3220 ஹெக்டயார் அளவுடைய அரச காணியினை மெல்லிய பலகைகள் கைத்தொழிற்சாலை ஒன்றை அமைந்து கொண்டு நடாத்துவதன் பொருட்டு எஸ். ஜே. பிளைவூட் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித் துண்டு இலக்கம் 152 மற்றும் 189;
கிழக்கு : காணித் துண்டு இலக்கம் 119;
தெற்கு : காணித் துண்டு இலக்கம் 119;
மேற்கு : காணித் துண்டு இலக்கம் 154.

கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்படதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பத்தைந்து (35) வருடங்கள் (2015.06.08 ஆம் திகதி திகதியிலிருந்து 2050.06.07 வரை).

(ஆ) **வருடாந்த குத்தகை காலம்** .- குத்தகையின் ஆரம்ப ஐந்து வருட காலப்பகுதியான 2015.06.08 ஆம் திகதியிலிருந்து 2020.06.07 ஆம் திகதி வரைக்கும் குத்தகையிலிருந்து விடுக்கப்படுகின்றது. பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2015 ஆம் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 50% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்;

**தவணைக் கட்டணம்**.- தவணைக் கட்டணம் அறிவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை மெல்லிய பலகைகள் கைத்தொழிற்சாலை அமைத்து கொண்டு நடாத்துவதன் பொருட்டு தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2015.06.08 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

டப். கே. வீ. டீ. துலாரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல,
2023, மே 21.

07 - 31

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2023**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2023 |
| | | வெள்ளி | 14.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2023 |
| | | வெள்ளி | 21.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2023 |
| | | வெள்ளி | 28.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2023 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 04.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.07.2023 |
| | | வெள்ளி | 11.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.07.2023 |
| | | வெள்ளி | 18.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.08.2023 |
| | | வெள்ளி | 25.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.08.2023 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 01.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2023 |
| | | வெள்ளி | 08.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2023 |
| | | வெள்ளி | 15.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2023 |
| | | வெள்ளி | 22.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2023 |
| | | புதன் | 27.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2023 |

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.